

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் "மக்கள் முதல்வரின் மனித நேய திருவிழா சூரிய சுடர் – 17, "அன்னை தெரசா மனம் கொண்டவர் அனைவரும் வாழும் குணம் கொண்டவர் 171 தொழு நோயாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா பகுதிச் செயலாளர், 8வது மண்டல குழு தலைவர் கூ.பீ.ஜெயின் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தமிழக அரசு தலைமை கொறடா கோவி. செழியன், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு நலதிட்ட உதவிகள் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன், வே.கௌதமன், வே.வாசு, டி.வி.செம்மொழி, சாவித்திரி ஸ்ரீ வீரராகவன், வானவில் விஜய், ஆர்.வரதன், ஆர்.தீனதயாளன் ஆகியோர் கலந்து கொண்டனர்.





சென்னை தெற்கு மாவட்டம், சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் சைதை மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் அறிவித்தப்படி இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல் பிரச்சார விளக்க ஆலோசனைக் கூட்டம் சைதாப்பேட்டை பஜார் சாலையில் உள்ள வர்த்தக சங்க அறக்கட்டளை திருமண மண்டபத்தில் 25.02.2024 ஞாயிற்றுக்கிழமை காலை பகுதிஅவைத்தலைவர் களக்காடி எல்லப்பன் தலைமையில் நடைபெற்றது. பகுதி கழக செயலாளரும் பத்தாவது மண்டல குழுத் தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அமைச்சரும், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளருமான மா.சுப்பிரமணியன், தென்சென்னை நாடாளுமன்ற தொகுதியின் சைதை தொகுதி பொறுப்பாளர் பேராசிரியர் கோ.வி. லெனின் ஆகியோர் கலந்துகொண்டு தேர்தல் பரப்புரை ஆலோசனைகளை வழங்கினார்கள். இக்கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி, பகுதி கழக நிர்வாகிகள் த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதா கௌதமன், வி.பி.ஜானகிராமன், வட்டக் கழக செயலாளர்கள் சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, அட்கோ கமலநாதன், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் சைதை சாதிக், நா.மணிகண்டன், எம்.எஸ்.அரிபாபு உள்ளிட்ட பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாக முகவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

லதாவாசு எம்.சி தலைமை! தயாநிதி மாறன் எம்.பி. - அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ. - வே.வாசு முன்னிலை!

# வில்லிவாக்கம் கிழக்கில் 171 ஓவியக் கலைஞர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## திருமதி. குமாரி விஜயகுமார் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழங்குகின்றனர்!

சென்னை, பிப்.27-

சென்னை கிழக்கு மாவட்டம் வில்லிவாக்கம் கிழக்கு பகுதி தி.மு.க சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத்தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு செந்தமிழ் தூரிகை பிடிப்பவர் ! திராவிட தேசம் வரைபவர்! சூரிய சுடர் 19. 171 ஓவியக் கலைஞர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (27.2.2024 - செவ்வாய்கிழமை) அன்று காலை 7.00 மணியளவில் நடைபெறுகிறது.

97வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. லதா வாசு எம்.சி. தலைமை தாங்குகிறார்.

சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் பி.கே சேகர் பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன், வில்லிவாக்கம் பகுதி செயலாளர் வே.வாசு ஆகியோர் முன்னிலையில் கழக மகளிர் அணி இணைச் செயலாளர் தலைவர் தமிழ்நாடு மகளிர் ஆணையம் திருமதி.குமரி. விஜயகுமார், 171 ஓவியக் கலைஞர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறர்.

இவ்விழாவில் மேற்குபகுதி செயலாளர் கூ.பி. ஜெயின் எம்.சி., செம்மொழி எம்.சி., சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி., வானவில் விஜய், ஜி.ஜெ.பிரபு, எம். சுரேஷ், புரசை டி.சம்பத், டி.தாமோதரன், டபள்யூ. அமுல், நா.அறிவுடைநம்பி, விக்னேஷ் சீனிவாசன், எ. வேதா, கே.பாஸ்கர், சி. தேவராஜ், காஞ்சி செ. துரை, வி.சபாபதி, வ. ரமேஷ்பாபு, மு.பரமானந்தம், டி.ஸ்டாலின் ந.குமார், எ.சத்திய நாராயணன், கி. ஜெய்சங்கர், ப.செந்தில் குமார், எஸ்.துரைபாபு, கே. ராஜா, வி,ஆர் ஜெயக்குமார் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியாராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு தலைவர் தலைமை செயற்குழு உறுப்பினர் ப.ரங்கநாதன், வில்லிவாக்கம் தொகுதி தேர்தல் பார்வையாளர் வே.கௌதமன் ஆகியோர் சிறப்புரையாற்றுக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கே.எஸ் இரவிச்சந்திரன், பி.கே. மூர்த்தி, கே.சந்துரு, சங்கரி நாராயணன், எம்.மணிமுடி, கே.எஸ்.எம் நாதன், எம்.விஜயகுமார் என்.பி.எம். ஷேக் அப்துல்லா, வே.உமாகாந்த், சி.மகேஷ்குமார், பரிதி இளம்சுருதி, எல். பி.எப். ஆர்.வரதன், வழக்கறிஞர் இந்திரஜித், கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.மகாதேவன், எ.புனிதவதி எத்திராசன், இசட்.ஆசாத், சொ.வேலு, சரிதாமகேஷ்குமார், பா.ஸ்ரீராமுலு, டாக்டர் ஜி.சாந்தகுமாரி, ஐ.சி. எப் வ.முரளிதரன், எ.நாகராசன், டி.எஸ்.பி. இராஜ கோபால், எம்.டி.ஆர் நாகராஜ். செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ. இராஜசேகர், எஸ் பன்னீர்செல்வம், கோ.மணி, பி.ஜெ. துளசிங்கம், பி.உதயசங்கர் ரமேஷ் (எ) நீலகண்டன், எம்.இப்ராஹிம் கனி, டாக்டர் ஏ.பி. பூர்ணிமா, அ.நிர்மலாதேவி, இரா.கலைச்செல்வி வழக்கறிஞர் எம். குணசேகரன், ஆ.சுரேஷ் குமார், உ.பிரசன்னவேலன், வழக்கறிஞர் பா.சுந்தர், சு. பழனிலே, கா.யுவராணி, வழக்கறிஞர். கே.சுப்பிரமணி, ஜெ.எஸ். பிரபு, வி.து. இராமமூர்த்தி, பா. இளையா, ம.கலைச்செல்வி, ஐ.சி.எப்.மு.சுரேஷ்பாபு, சிட்கோ சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா. அகிலன், பா.ஜானி, சொ. முருகேசன், ப.லோகுபாபு, ஜெ.தங்கராஜ், ஆர்கோபாலகிருஷ்ணன், கோ.மணி வேந்தன், மா.கபிலன், பா. தே.தீனதயாளன், கே.எஸ். பாபு. க.மணிமாறன், எஸ். கே.தீபக்குமார் மா.சுந்தர் எபி, ஆ.சக்திவேல், சிட்கோ. பி.சுரேஷ்பாபு, பூ.சத்தியந்திரன், ம.ஜெகதீஸ்வரன், டி. ஜானகிராமன் பிரேமாதயாளன், ஆர்.இருதயமேரி, வழக்கறிஞர் ஜி.அய்யனார், ஆர்.மோகன்ராஜ், டி.எச். செல்வராஜ், சி.எம்.பாரதி, ஏ.வி.ஜான்பால், டிஜிட்டல் ஜி.சுதாகர், எஸ்.ராஜா, ஆர். சீனிவாசன்., எம்.விஜயகுமார், வி.ராஜமாணிக்கம், க.பிரதீஸ்வர், பொ.தெய்வசிகாமணி, எம்.குமார், வா. உதயகுமார், ஆர்.ஸ்ரீராம் (எ) லவக்குமார், எஸ்.சூசைராஜ், டி.எஸ்.தங்கராஜ் நா. செந்தில்குமார், எம்.வெங்கடேசன் பா.மோகன், எம். சக்திவேல், ரா.கமேஷ்வரன், ஆர்.கற்பகம், கோ.ஹேமலதா

இந்நிகழ்ச்சிக்கு 97 அ வட்ட செயலாளர் ச.மனோகரன் நன்றி கூறுகிறார்.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் விபத்தில்லாமல் பணிபுரிந்த ஓட்டுநர்களுக்குப் பரிசு -

# பணியின் போது உயிரிழந்தோரின் வாரிசுகளுக்கு பணி நியமன ஆணைகள்!

## போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் வழங்கினார்!

சென்னை, பிப்.27-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்கிணங்க, நேற்று (26.02.2024) மாநகர் போக்குவரத்துக் கழகம் மற்றும் அரசு விரைவுப் போக்குவரத்து கழகங்களில், கடந்த 25 ஆண்டுகளுக்கு மேல் விபத்தில்லாமல் பணிபுரிந்த ஓட்டுநருக்கு 4 கிராம் தங்க நாணயமும், கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக விபத்தில்லாமல் பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு தலா 100 கிராம் வெள்ளி நாணயம் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள், மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் பணியின் போது உயிரிழந்த பணியாளர்களின் 6 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலான நடத்துநர் பணி நியமன ஆணைகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்கிணங்க, நேற்று (26.02.2024) மாநகர் போக்குவரத்துக் கழக மத்தியப் பணிமனையில், போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாநகர் போக்குவரத்துக் கழகத்தில், கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக விபத்தில்லாமல் பணிபுரிந்த மாநகர் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த 335 ஓட்டுநர்களுக்கு தலா 100 கிராம் வெள்ளி நாணயம் பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கினார்.

மேலும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில், கடந்த 25 ஆண்டுகளுக்கு மேல் விபத்தில்லாமல் பணிபுரிந்த ஒரு ஓட்டுநருக்கு 4 கிராம் தங்க நாணயமும், 10 ஆண்டுகளுக்கு மேல் விபத்தில்லாமல் பணிபுரிந்த 24 ஓட்டுநர் மற்றும் ஓட்டுநர் உடன் கூடிய நடத்துநர்களுக்கு வெள்ளி நாணயம் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரிந்து, பணியின்போது இறந்த பணியாளர்களின் 6 வாரிசு தாரர்களுக்கு கருணை அடிப்படையிலான நடத்துநர் பணி நியமன ஆணையினை வழங்கினார்.

இவ்விழாவில், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், அரசு விரைவுப்போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் இரா.மோகன், உயர் அலுவலர்கள், தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலை!

# துறைமுகம் 57 (அ) வட்டத்தில் 250 குடியிருப்பு காவலாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் வழங்குகிறார்! பா.அண்ணாதுரை தலைமை!

சென்னை, பிப். 27

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதி, 57 (அ) வட்டக் கழகம் சார்பில் " மக்கள் முதல்வரின் மனிதநேயத் திருவிழா" சூரிய தொடர் 23, " குடியிருப்பின் நிம்மதி காவலரால் குடியுரிமை நிலைத்திடும் முதல்வரால்" எனும் தலைப்பில் 250 குடியிருப்பு காவலாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (28.2.2024 புதன்கிழமை) மாலை 4 மணிக்கு, நாட்டுபிள்ளையார் கோவில் தெரு, செங்காம் பஜார் அருகில் நடைபெறுகிறது.

57 (அ) வட்டக் கழகச் செயலாளர் பா.அண்ணாதுரை தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்.

எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், பி.ஸ்ரீராமுலு, ராஜேஷ் ஜெயின், எம்.ஷேக் அப்துல்லா, ஆர். கலைச்செல்வி, எம்.இப்ராஹிம் கனி, பி.விஜயகுமார், எம்.விநாயகம், பா.ஜெகதீஷ், எல்.சம்பத்குமார், பா. பிரதீப்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கே. ஆர். அபரஞ்சி, டி.எஸ்.சேகர், நா.ரஞ்சித் விஜயாலயன், பூக்கடை எஸ்.வெங்கடேசன், எல். சாந்திலால் பி.அசோக் ஜெயின், நா.மோகன், டி. சேகர், ஜெ.ஹரிகுமார் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் எஸ் எஸ் சிவசங்கர் கலந்து கொண்டு 250 குடியிருப்பு காவலாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், தொகுதி பார்வையாளர் க.பிரபு, கோ.ஏகப்பன், தேவஜவகர், புனிதவதி எத்திராசன், இசட்.ஆசாத், கே.பரிமளம், எல்.நவீன், மே.ஜனார்த்தனன், ம.முத்துக்குமார், ந. சுந்தரம், எல்.சந்தியாகு, செ. தமிழ்வாணன், வி.சந்தான லட்சுமி, சி.ப.ஜெயராமன், ஜி.ராமமூர்த்தி, மா.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர். ரவிச்சந்திரன், டி.சதீஷ் குமார், வே.பா.பிரபாகரன், எஸ்.புகழேந்தி, எல்.சத்திய நாராயணன், ஆர்.ஏ. அஸ்லாம், டி.கதிரவன், ம.பரத்குமார், ஆ.நா.பார்த்திபன், க. கவியரசு, கே.ஜி.துளசிராமன், டி.வேலு, கே.பவானி, எஸ்.சந்திரசேகர், பா.முத்துகுமார், என்.ராஜா, கேபிள் சங்கர் பின்டு ஜெயின், யூ.ரூபாராம், பூக்கடை ராஜா, கே.ஜெயபிரகாஷ், டி.சண்முகம், எஸ்.ராஜீ, எம்.உதயா, எம்.ஆனந்தி, எஸ்.ரீட்டா, எம்.சாய்பவன், எம்.வருண்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்ட துணைச் செயலாளர் சி.காந்தி நன்றி கூறுகிறார்.

நே. சிற்றரசு தலைமை! சென்னை மேற்கு மாவட்ட

# கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் சி.கே.ரங்கராஜ் அறிவிப்பு!

சென்னை, பிப்.27-

சென்னை மேற்கு மாவட்ட கழக அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மாவட்ட அமைப்பாளர் சி.கே.ரெங்கராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை மேற்கு மாவட்ட கழக அமைப்பு சாரா ஓட்டுநர் அணியின் ஆலோசனைக் கூட்டம் இன்று (27.2.2024, செவ்வாய்க்கிழமை) காலை 10 மணி அளவில் சென்னை நுங்கம்பாக்கம் காம்தார் நகர் மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் நடைபெற உள்ளது.

அது சமயம் மாவட்ட தலைவர் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: மார்ச் 1 கழகத் தலைவர் முதல்வர் அவர்கள் பிறந்தநாள் நிகழ்ச்சி, வரும் நாடாளுமன்ற தேர்தல் பணிகள், கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பணியிடை நீக்கம் செய்ய உத்தரவிடப்பட்ட

# சேலம் பெரியார் பல்கலை பதிவாளர்க்கு புதிய பதவி!

## போராட்டம் நடத்த ஆசிரியர் சங்கம் முடிவு!

சேலம், பிப்.27-

பணியிடை நீக்கம் செய்ய உத்தரவிடப்பட்ட சேலம் பெரியார் பல்கலைக்கழக பதிவாளர் தங்கவேலு, விடுப்பு முடிந்து புதிய துறையில் - கணினி அறிவியல் துறைக்குத் தலைவராக நேற்று பொறுப்பேற்றுக்கொண்டார். இதற்கு கண்டனம் தெரிவித்து ஆசிரியர் சங்கம் போராட்டம் நடத்தப்போவதாக தெரிவித்துள்ளது.

சேலம் பெரியார் பல்கலைக்கழக பதிவாளர் தங்கவேல் பணியிடை நீக்கம் செய்யப்படாததைக் கண்டித்து இன்று முதல் தொடர் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் எச்சரித்துள்ளது. சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற முறைகேடு புகாரில் பல்கலைக்கழக பதிவாளர் தங்கவேலை பணியிடை நீக்கம் செய்து உயர்கல்வித் துறை நடவடிக்கை எடுத்துள்ளது. ஆனால் உத்தரவு பிறப்பித்து இரண்டு வாரமாகியும் பல்கலைக்கழக துணைவேந்தர் ஜெகநாதன் அவரை பணியிடை நீக்கம் செய்ய தொடர்ந்து மறுத்து வருகிறார்.

இன்னும் 3 நாட்களில் தங்கவேல் பணியில் இருந்து ஓய்வுபெறவுள்ளதால் இந்த விவகாரத்தில் சிறப்பு ஆணை வெளியிடவேண்டும் என்று அரசுக்கு ஆசிரியர் மற்றும் பணியாளர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதனிடையே மருத்துவ விடுப்பு முடிந்து நேற்று பணிக்கு திரும்பிய தங்கவேல் கணினி அறிவியல் துறை தலைவராக பதவியேற்று கொண்டார். இந்நிலையில் அரசின் உத்தரவுப்படி தங்கவேல் மீது துணைவேந்தர் நடவடிக்கை எடுக்காததை கண்டித்து தொடர் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அச்சங்கம் தெரிவித்துள்ளது.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, கும்முடிப்பூண்டி ஒன்றியம், பெருவாயல் ஊராட்சியில் புதிய ஊராட்சி மன்ற அலுவலகத்தை திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் திறந்து வைத்தார். உடன் எஸ்.ரமேஷ், பா.செ.குணசேகர், கே.எம்.எஸ்.சிவகுமார், ஊராட்சி மன்ற தலைவர் ஆர்.ராஜா சேகர், இரா.அறிவழகன், கே.திருமலை, மு.பாஸ்கர், ஏ.கே.சம்பத்குமார், அப்துல்கரீம், டி.ஜெ.ஜி.மனோஜ், கே.ஜி.நமசிவாயம், இ.பிரபு, சுரேஷ், வெங்கடேசன், சீனு, பி.சுரேஷ், கோவிந்தன், இ.எம்.ராஜேஷ், ஷியாம் பாலசண்முகம் மற்றும் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

தா.இளைய அருணா, கலாநிதி வீராசாமி, ஆர்.டி.சேகர், வழக்கறிஞர் எ.சரவணன் பங்கேற்பு!

# பெரம்பூர் வடக்கு பகுதி பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் அ.முருகன் அறிவிப்பு!

சென்னை, பிப்.27-

பெரம்பூர் வடக்கு பகுதி செயலாளர் அ.முருகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி பெரம்பூர் வடக்கு பகுதி பாக முகவர்கள் BLA 2 ஆலோசனைக் கூட்டம் நாளை (28-02-2024, புதன்கிழமை) அன்று காலை 9 மணி அளவில் முத்தமிழ் நகர், எஸ்.ஆர்.ராமசாமி திருமண மஹாலில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு பகுதி செயலாளர் அ.முருகன் தலைமை வகிக்கிறார். பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. முன்னிலை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா, டாக்டர் கலாநிதி வீராச்சாமி எம்.பி, பெரம்பூர் தொகுதி பொறுப்பாளர் வழக்கறிஞர் எ.சரவணன், ஆகியோர் பாக முகவர்கள் மற்றும் பாக உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்குகிறார்கள்.

எனவே இக்கூட்டத்தில் பெரம்பூர் தொகுதிக்கு உட்பட்ட தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதி செயலாளர் அ.முருகன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# தி.மு.க. நெசவாளர் அணி

# மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

## நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிவிப்பு!

தி.மு.க. நெசவாளர் அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் 29-2-2024 வியாழக்கிழமை காலை 11.00 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள்; நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 24.02.2024

**நன்னியூர் இராஜேந்திரன்**
செயலாளர்,
தி.மு.க. நெசவாளர் அணி.